# வடக்கு மாகாணத்தில் கொலைகளால் காவு கொள்ளப்பட்டுள்ள மனித உயிர்கள்: உயிரின் மாண்பினை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்தவ நோக்கு (2009 - 2022)

**ஹேரோசினி, போல் றோகான்**
herosinijesurasa@gmail.com, paulrohan@univ.jfn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதர்கள் மாண்போடு வாழ்வதற்கான உரிமை மனித உரிமைகளிலேயே மிக முக்கியமானதும் அடிப்படையானதுமானதாக அமைந்துள்ளது. மனித மாண்பைப் போற்றும் திருவிவிலியம் முழுவதும் பரந்துபட்டு உள்ள சிந்தனைகள் மானுட மாண்பு மற்றும் மானிட உயிர் சார்ந்ததாகும். கிறிஸ்தவ நோக்கில் மனித உயிர் மூச்சானது மாண்புமிக்கதாகத் திகழ்கின்றது. மனித உயிர் கடவுள் வழங்கிய மிகப் பெரிய கொடைகளுள் ஒன்றாகும். மனிதர்களாகிய ஒவ்வொருவருக்கும் இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கான உரிமை உள்ளது. மனித கொலை என்பது ஒரு மனிதனின் உயிரினை இன்னொரு மனிதர் மரணம் அடையச் செய்வதாகும். போருக்குப் பிற்பட்ட காலத்திலிருந்து சமகாலம் வரை மனித கொலையினால் வடக்கு மாகாணத்தில் உயிர் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இம்மாகாணத்தில் பதின்மூன்று ஆண்டுகளுள் ஏராளமான உயிர்கள் மனித கொலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. கடவுள் மனித உயிரை காவுகொள்ளச் செய்வதற்கான அதிகாரத்தினை மனிதர்களுக்கு வழங்கவில்லை. கிறிஸ்தவமானது மனித உயிரின் மாண்பினை பத்துக்கட்டளைகள் மூலமாக வலியுறுத்துகின்றது. அவற்றுள் கொலை செய்யாதே என்ற ஐந்தாவது கட்டளையின் பின்னணியில் மனித கொலைகளை தடுப்பதற்கு அழைப்புவிடுத்துள்ளது. ஐந்தாவதாக அமையும் இக்கட்டளை ஏனைய மனிதர்களின் உயிரை கொலை மூலம் காவுகொள்வதை முற்றிலும் நிராகரிக்கின்றது. அத்தோடு இக்கட்டளை வாயிலாக மனித உயிரின் மாண்பினை உணரச் செய்யத் தூண்டியுள்ளது. இவ் ஆய்வில் மனித கொலைகள் இடம்பெற்றமைக்கான தரவுகள் மற்றும் கொலைகளில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகள் மற்றும் பாலின ரீதியான எண்ணிக்கைகள் கள ஆய்வின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. மனித உயிர் கடவுளுக்குச் சொந்தமானது. மனித உயிர் புனிதமானது, மேன்மையானது மற்றும் விலைமதிப்பற்றது போன்ற சிந்தனைகளை இவ் ஆய்வானது ஆழப்படுத்தியுள்ளது. மனித கொலைகளைத் தவிர்த்து உயிரைப் பாதுகாப்பது ஒவ்வொருவருடைய கடமையாகத் திகழ்கின்றது. பிறரில் இறைசாயலை உணர்வதன் ஊடாகவே மனித கொலைகள் இடம்பெறுவதைக் குறைக்கலாம்.

**திறவுச்சொற்கள்:** இறைசாயல், மனித உயிர், மாண்பு, கிறிஸ்தவம், கொலை

## அறிமுகம்

சமகாலத்தில் மனித உயிர்களுக்கான மாண்பும் முக்கியத்துவமும் கேள்விக் குள்ளாக்கப்பட்டுள்ளது. மானிடர்களுக் கான வன்முறையான சூழல் நாளுக்கு நாள் அச்சத்தினை ஏற்படுத்துகிறது. சக மனிதனை மனிதனாகப் பார்த்தலும், அங்கீகரித்தலும், பாசத்தோடும் பரிவோடும் கருணையோடும் அணுகுதலும் மனித மாண்பின் கூறுகளாகும். இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவடைந்த நிலையில் வட மாகாணத்தில் இயற்கைக்கு முரணான மனித கொலைகள் நாட்டு மக்களிடையே பேரச்சத்தினை ஏற்படுத்தியுள்ளன. அதி வேக விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச் சியின் பின்னணியிலும் சடப் பொருள்வாத நுகர்வுக் கலாசாரத்தின் ஊடுருவல் மத்தியிலும் மதிப்பீடுகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படாமையினால், மனித உயிர் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றது. மனித கொலையானது குற்றச்செயலாகவே பார்க்கப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் மனித கொலைகளினால் பல்வேறு உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. மனித உயிரின் மாண்பினை உணராத நிலையினால் கொலைகள் இடம்பெறுவது அதிகரித்துச் செல்கின்றது. இவ் ஆய்வானது கிறிஸ்தவ நோக்கில் கொலை செய்யாதே என்ற கட்டளையின் தாற்பரியத்தினை இனங்காண்பதாக அமைந்துள்ளது.

## இலக்கிய மீளாய்வு

பி. சகேஷ் (2014) என்பவர் எழுதிய “உயிர் வலி” என்ற நூல் இவ் ஆய்விற்கு பிரதான நூலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மனிதர் களை எச்சூழ்நிலைகளிலும் கொலை செய்யக்கூடாது என்பதனை ஆசிரியர் திருவிவிலிய சான்றுகள் வழி இந்நூலில் வலியுறுத்தியுள்ளார். மனித உயிர்களைக் கொலை செய்வது என்பது அவரது வாழும் உரிமையை காவுகொள்வதாகும். அதுமட்டு மில்லாமல் மனிதரைப் படைத்தவரின் உரிமையில்லாமல் எப்படி அழிக்க முடியும்? என்ற வினாவினை எழுப்பியுள்ளார்.

கவிதா ஆல்பர்ட் (2008) எழுதிய உயிர் என்னும் நூலும் இவ் ஆய்விற்கு துணை புரிந்துள்ளது. பழிக்கு பழி வாங்க வேண்டு மென்று சிந்தித்தால் உலகத்தில் யாரும் உயிர் வாழ முடியாது. மனிதனை மனிதர் கொலை மூலமாக காவுகொள்ளச் செய்கின்ற நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. சமகாலத்தில் இயற்கை மரணங்களை விட தீவிரவாதம், போர், இயற்கை அனர்த்தம், தற்கொலை, படுகொலை போன்ற பல்வேறு காரணிகளால் காவுகொள்ளப்படுகின்ற உயிர்கள் ஏராளமானவை. பழிவாங்குகின்ற சிந்தனையினால் மனித உயிர்கள் கொலை செய்யப்பட்டுள்ளன. சட்டத்தின் போர் வையில் பல படுகொலைகள் நடைபெற் றுள்ளன. பணத்திற்காக படுகொலை செய்யும் பாதக நிலையினை அன்றாட வாழ்வில் எதிர்நோக்குகின்றார்கள். மனித உயிரின் மாண்பினை உணர்ந்த ஒவ்வொரு மனிதர்களும் உள்ளத்தில் அன்பினை வளர்க்க இந்நூல் உதவி புரிந்துள்ளது.

## ஆய்வின் நோக்கம்

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இருந்து 2022ம் ஆண்டு வரை வடக்கு மாகாணத்தில் மனித கொலைகளால் உயிர் எதிர்நோக்கிய அச்சுறுத்தல்கள் வெளிக் கொணரப்படுவது பிரதான நோக்கமாகும். இதனை கிறிஸ்தவ நோக்கு ரீதியாக பொதுவாக ஆய்விற்குட்படுத்தியுள்ளது.

## ஆய்வுப் பிரச்சினைகள்

வடக்கு மாகாணத்தில் அதிகளவு மனித கொலைகள் இடம்பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சம காலத்தில் இது பாரியதொரு பிரச்சினை யாகவே அமைந்துள்ளது. மனித

கொலைகள் இடம்பெற்றமைக்கு செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகளை அடையாளப்படுத்தி, விழிப்புணர்வினை மேற்கொள்வது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது.

**ஆய்வின் முக்கியத்துவமும் தர்க்க ரீதியான நியாயப்பாடும்**

மனித உயிர் மூச்சின் மேன்மையை பலர் உணராத நிலையினால் வடக்கு மாகாணத்தில் மனித கொலைகள் அதிகம் இடம்பெற்று வருகின்றது. எனவே மனித உயிரின் மேன்மையினை தெளிவுபடுத்துவது இன்றியமையாதது. தன்னுடைய உயிர் மாத்திரம் அல்ல பிறருடைய உயிரும் மாண்புமிக்கது என்ற சிந்தனையை ஆழப்படுத்துவது அவசியமான தொன்றாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வில் உய்த்தறிவு, தொகுத்தறிவு, ஒப்பீட்டு மற்றும் விபரண முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. திருவிவிலியம் முன்வைக்கும் உயிரின் மாண்பினை வெளிக்காட்டுகின்ற கோட்பாடுகளிலிருந்து தர்க்க ரீதியான முறையில் வடக்கு மாகாணத்தில் மனித உயிரின் தனித்துவ மாண்பு மீறல்களை ஆய்வுக்குட்படுத்த உய்த்தறிவு முறை பயன்படுத்தப்படுகின்றது. திருவிவிலியம் மற்றும் திரு அவைப் போதனையின் அடிப்படையில் மனித உயிரின் மாண்பு பற்றிய கோட்பாடுகளைத் தொகுத்து போருக்குப் பின்னரான வடக்கு மாகாணத்தில் கொலையினால் உயிரின் மாண்பினை மீறும் செயற்பாடுகளை தொகுத்தறிவு முறை மூலமாக ஆய்விற்குட்படுத்துதல். மேலும் கிறிஸ்தவ நோக்கில் மனித உயிரின் மாண்பினை விபரித்துக் கூறுவதற்காக விபரண ஆய்வு முறை பயன்படுத்தப்படுகின்றது.

**ஆய்வு பிரதேசம்**

வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் மனித கொலைகளால் காவுகொள்ளப்பட்டுள்ள உயிர்களை மையப்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தரவுச்சேகரிப்பு கருவிகள் மற்றும் தரவுப் பகுப்பாய்வு**

முதன்நிலைத்தரவுகளானது பொலிஸ் நிலையம் மற்றும் வைத்தியசாலைகளில் உள்ள பொறுப்பதிகாரிகளை நேர்காணல் செய்து பெறப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகள் கிறிஸ்தவ நோக்கில் மனித உயிரின் மாண்பினை வெளிப்படுத்துகின்ற புத்தகங்கள் மற்றும் ஆய்வறிக்கைகள் ஊடாகவும் சேகரிக்கப்பட்டுள்ளன. கருப்பொருள் உள்ளடக்கப்பட்டப் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**மனித உயிர் மூச்சின் மேன்மை**

கிரேக்க மொழியில் உயிரானது Zoe (ஸோயே), Bios (பயாஸ்) எனவும் அழைக்கப்படுகின்றது. கடவுள் மனித உயிர் மூச்சினுடைய மேன்மையினை மனிதனுடைய படைப்பு உருவாக்கத்தின் மூலமாக தெளிவுபடுத்தியுள்ளார். “மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.” (தொடக்க நூல் 2:7) ஆகவே கிறிஸ்தவ நோக்கில் மனித உயிர் மூச்சு கடவுள் பார்வையில் மாண்புக்குரியதாகும்.

**பழைய ஏற்பாட்டு பின்னணியில் மனித கொலைகள்**

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் முறிப்புக்கு முறிப்பு, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், மனிதரைக் கொன்றால் கொலை செய்யப்பட வேண்டும் என்ற பழிவாங்கும்

பண்பாடு மேலோங்கி இருந்தது. (லேவியர் 24:20-21) கல்லால் எறிந்து கொலைத் தண்டனை நிறைவேற்றப்பட்டமைக்கான சான்றுகள் பல உள்ளன. (லேவியர் 24:14) ஓய்வு நாளை மீறியதற்காகக் கல்லெறிந்து கொலை செய்யப்பட்டுள்ளார்கள். தந்தைக்கு கீழ்ப்படியாத மகன் கல்லால் எறிந்து கொலை செய்யப்பட வேண்டும் என்ற தண்டனை முறை யூதச் சமுதாயத்தில் நடைமுறையில் இருந்துள்ளது. (இணைச் சட்டம் 21:21) நெருப்பினால் சுட்டெரித்து பல மனித உயிர்களையும் காவுகொள்ளச் செய்துள்ளார்கள். (லேவியர் 21:9) அக் காலத்தில் மனிதரை பொது இடத்தில் கல்லால் எறிந்து கொலை செய்த மனிதர்களிடம் உயிரின் மாண்பு பற்றிய சிந்தனை குறைவாகவே இருந்திருக்கும்.

### கடவுள் மனித உயிரின் பாதுகாவலர்

காயின் ஆபேலின் உயிரைக் காவு கொண்டார். இச்சூழலில் கடவுள் காயினை சபித்துள்ளார். “உன் சகோதரரின் இரத் தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கின்றது”. மனித உயிர்கள் அனைத்தும் கடவுளுக்கே சொந்தமானது. மண்ணுலகில் மனித உயிர் களுக்கு எவ்விதப் பாதிப்பு ஏற்பட்டாலும் கடவுள் செவிசாய்ப்பார். தனி மனிதரின் உயிர் கடவுளின் உடைமை. (சகேஷ், 2014) (தொடக்க நூல் 04:11) “இப்பொழுது உன் கைகள் சிந்திய உன் சகோதரனின் இரத்தத்தை தன் வாய் திறந்து குடித்த மண்ணை முன்னிட்டு, நீ சபிக்கப்பட்டிருக் கின்றாய்” என்றார். கடவுள் ஆபேலின் உயிரை காயின் காவுகொண்டதற்கு தண்டனை வழங்குகின்றார். “நீ மண்ணில் பயிரிடும் பொழுது, அது இனிமேல் உனக்குப் பலன் தராது. மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்” என்றார். குற்றமற்றவர் மட்டுமன்றி குற்றவாளிகளின் உயிர் கூட கொலை செய்யப்படக் கூடாது. கடவுள் காயினுடைய உயிருக்கு அடைக்கலம் வழங்கியுள்ளார். “காயினைக் கொல்கின்ற எவனும் ஏழு முறை பழிவாங்கப்படுவான்” எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. “காயினைக் கண்டுபிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவர்மேல் ஓர் அடையாளம் இட்டார்.” (தொடக்க நூல் 04:15) இந் நிகழ்வின் ஊடாக கடவுள் மனித உயிரின் பாதுகாவலர் என்பது தெளிவுபடுத்தப் படுகின்றது. எனவே கடவுள் மனித கொலை செய்யப்படுவதை முற்றிலும் தடுப்பதற்கு அழைப்புவிடுத்துள்ளார்.

### யோசேப்பின் உயிர் பாதுகாப்படுதல்

தோத்தானில் யோசேப்பின் உயிரை காவுகொள்ள சகோதரர்கள் முற்பட்டார்கள். “நாம் அவனைக் கொன்று இந்த ஆழ் குழிக்குள்...” (தொடக்க நூல் 37:20) ரூபன் “நாம் அவனைச் சாகடிக்க வேண்டாம்” என்றார். யூதா “சகோதரனைக் கொன்று அவன் இரத்தத்தை மறைப்பதனால் நமக்கு என்ன பயன்?” என்றார். யோசேப்பை குழி யிலிருந்து வெளியே தூக்கி, இஸ்மயே லரிடம் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றனர். யோசேப்பின் உயிரானது ரூபன், யூதாவின் ஆலோசனைகளால் காப்பாற்றப்பட்டுள் ளது. (தொடக்க நூல் 37:21)

### மருத்துவப் பெண்களின் செயற்பாட்டில் மனித உயிர்

(விடுதலைப் பயணம் 01:17) சிப்ரா, பூவா என்ற இரண்டு எபிரேய மருத்துவப் பெண்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால், ஆண் குழந்தைகளின் உயிரையும் வாழ விட்டார்கள். “பிறக்கும் எபிரேய ஆண்மகவு என்றால் அதைக் கொன்று விடுங்கள். பெண் மகவு என்றால் வாழட்டும்” என்றார். பிறக்கும் எபிரேய ஆண்மகவு அனைத் தையும் நைல்நதியில் எறிந்துவிட பார்வோன் மன்னன் ஆணையிட்டார்.

எகிப்திய மன்னன் பார்வோன் இக் கட்டளையை அறிவித்த சூழலில், மருத்துவப் பெண்கள், ஆண் குழந்தைகளினுடைய உயிரைப் பாதுகாத்துள்ளார்கள். "ஆண் குழந்தைகளையும் வாழ விட்டார்கள்." (விடுதலைப் பயணம் 01:17)

**கொலை செய்யாதே என்ற ஐந்தாவது கட்டளை**

பத்துக் கட்டளைகள் யாவேக்கும், இஸ்ரயேலருக்கும் இடையிலான உடன படிக்கைக் கோரிக்கைகளின் சுருக்கமாகத் திகழ்கின்றன. பத்துக் கட்டளைகள் காலந் தோறும் சமய, பண்பாட்டு வளர்ச்சியிலும், வரலாற்றிலும் சமூக அமைப்பின் பேருரிமைப் பத்திரமாக விளங்குகின்றன. (தியாகு, 1998) (விடுதலைப் பயணம் 20:13), (இணைச் சட்டம் 05:17)ம் வசனங்களில் "கொலை செய்யாதே" என்ற ஐந்தாம் கட்டளை மனித உயிர் மட்டில் உள்ள பொறுப்புடன் கூடிய கடமைகளை எடுத்தியம்புகின்றன. (மிக்கேல்ராஜ், 1971)

**அடைக்கல நகர்களும் உயிர்களின் மாண்பும்**

மோசே கொடுத்த கட்டுப்பாட்டை மையப் படுத்தி எழுந்ததே அடைக்கல நகர்கள். நீதி நெறிச்சிந்தனை, குற்ற மற்றவர்களின் உயிர்கள் காவு கொள்ளப் படக்கூடாது என்னும் அடிப்படையில் அடைக்கல நகர்கள் தோன்றின. இஸ்ரயேலின் தொடக்க காலத்தில் ஆலய முற்றம், பலிப்பீடக் கொம்புகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் அடைக்கலம் தரும் இடங்களாக கருதப்பட்டன. ஆனால் இணைச் சட்ட நூல் காலத்தில் எருசலேமில் மட்டும் ஒரே ஆலயம், ஒரே வழிபாட்டுத் தலம் என்னும் சிந்தனை வளர்ந்த பொழுது, குற்றமற்ற கொலையைச் செய்த அனைவரும் உடனே எருசலேமிற்கு ஓடித் தப்பிக்க முடியாத சூழல் காணப்பட்டுள்ளது.

எருசலேம் தவிர வேறு ஆறு நகர்களும் அடைக்கல நகர்களாக குறிக்கப்பட்டன. லேவியருக்கு நாற்பத்தெட்டு நகர்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் கொலையாளி தப்பியோடித் தஞ்சம் அடைவதற்கான அடைக்கல நகர்கள் ஆறு காணப்பட்டுள்ளன. (எண்ணிக்கை 35:06) பழைய ஏற்பாட்டில் அடைக்கல நகர்கள் மனித உயிரைப் பாதுகாக்கின்ற அரணாக செயற்பட்டுள்ளன. தவறுதலாக ஒருவரைக் கொலை செய்தவர் இரத்தப்பழி வாங்குபவரிடமிருந்து தப்பி ஓடித் தஞ்சம் அடைவதற்கு இந்நகர்கள் அடைக்கலமாய் அமைந்துள்ளன. (யோசுவா 20:03)

தேர்ந்து கொள்ளப்பட்ட அடைக்கல நகர்கள் பின்வருமாறு உள்ளன. நப்தலி மலை நாட்டில் "கெதேசு", எப்ராயிம் மலைநாட்டில் "செக்கேம்", யூதா மலைநாட்டில் எபிரோன் எனப்படும் "கிரியத்து அர்பா", யோர்தானுக்கு அப்பால் எரிகோவுக்குக் கிழக்காக ரூபனின் குலத்திற்குரிய பாலைநிலச் சமவெளியில் "பெட்சேர்", காத்து குலத்திற்குரிய கிலயாதில் "இராமோத்து", மனாசேயின் குலத்திற்குரிய பாசானில் "கோலான்" என்பன. கொலைத் தண்டனைக்கு உட்படுவதைத் தடுக்க அடைக்கல நகர்கள் கட்டப்பட்டுள்ளன.

**சாலமோனின் நீதித்தீர்ப்பில் மனித உயரின் மாண்பு**

சாலமோன் நீதித் தீர்ப்பு வழங்குவதற் கெனக் கடவுள் அருளிய ஞானத்தை நிறைவாகக் கொண்டிருந்தார். (1 அரசர்கள் 03:27) இரு விலைமாதருடைய குழந்தை களில் ஒரு குழந்தை இறந்துவிட்டது. இறந்த குழந்தை உன்னுடையது. உயிரோடிருக்கும் குழந்தை என்னுடையது என இருவரும் அரசர் முன் வாதாடி உள்ளார்கள். இச்சூழலில் சாலமோனின் ஞானமிகு தீர்ப்பு வெளிப்பட்டது. "உயிரோடிருக்கும்

குழந்தையை இரண்டாக வெட்டி, ஒரு பாதியை ஒருத்தியிடமும் மறுபாதியை மற்றொருத்தியிடமும் கொடுங்கள்” என்றார். (1 அரசர்கள் 03:25) உயிரோடிருந்த குழந்தையின் தாய் “வேண்டாம் என் தலைவரே! கொல்ல வேண்டாம். உயிரோடி ருக்கும் குழந்தையை அவளிடமே கொடுத்து விடுங்கள்” என்று கூறினார். சாலமோன் மனித உயிரினை மையப் படுத்தி உண்மையான குழந்தையின் தாயை இனங்கண்டு கொண்டார். சாலமோன் “உயிரோடிருக்கும் குழந்தை யைக் கொல்ல வேண்டாம்” என்றார். இந் நிகழ்வின் மூலமாக உயிரின் மாண்பினை சாலமோன் மன்னன் நிலைநாட்டி உள்ளார்.

**குழந்தை இயேசுவின் உயிர் கொலை செய்யப்படாது பாதுகாக்கப்படுதல்**

வானதூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, நீ எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு தப்பி ஓடிச் செல்லும். ஏனெனில் குழந்தையை ஏரோது கொல்வதற்காகத் தேடப் போகிறான். (மத்தேயு 02:13) இச்சூழலில் வானதூதர் வாயிலாக குழந்தையாகிய இயேசுவின் உயிர் பாது காக்கப்படுகின்றது. எகிப்தில் யோசேப்புக்கு கனவில் வானதூதர் தோன்றி, நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ரயேல் நாட்டுக்குச் செல்லும். ஏனெனில் குழந்தையின் உயிரைப் பறிக்கத் தேடியவர்கள் இறந்து போனார்கள். (மத்தேயு 02:20) எனவே யோசேப்பு குடும்ப உறுப்பினர்களோடு எகிப்திலிருந்து தமது சொந்த ஊருக்கு திரும்பி சென்றுள்ளார்.

**இயேசுவின் போதனைகளில் கொலை செய்யாதே**

மனித உயிர்களின் மாண்பினை போற்றிய இயேசுவிற்கு கிடைத்தது மரண தண்டனை. கொலை செய்யாதே. கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர் என்று முற்காலத்தவர்களுக்கு கூறப் பட்டுள்ளது. தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார். “முட்டாளே” என்று கூறுபவர் தலைமை சங்கத்தீர்ப்புக்கு உட்படுவர். “அறிவிலியே” என்பவர் எரிநரகத்திற்கு ஆளாவார். (மத்தேயு 05:21) எனவே அனைத்து கொலைகளுக்குத் துணையாக விளங்குகின்ற சினம் தவிர்க்கப்படுதல். சினம், கொலை ஒரே அளவை கொண்டுள்ள தீமைகள் என இயேசு குறிப்பிட்டுள்ளார். சினத்தை குறைப்பதன் வாயிலாக கொலைகள் இடம்பெறுவது குறைக்கப்படு கின்றன. இதன் ஊடாக மனித உயிரின் மாண்பினை நிலைநாட்டலாம் என சமு தாயத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இயேசுவை பின்பற்ற விரும்பிய செல் வருக்கு நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்வதற்கு கட்டளைகளை கடைப் பிடிப்பது அவசியமானது என்றார். அக் கட்டளைகளில் முதலாவது கொலை செய்யாதே! இக்கட்டளை ஊடாக மனித உயிரின் மாண்பானது வெளிப்படுத்தப் பட்டுள்ளது. (மாற்கு 10:19) கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச் சான்று சொல்லாதே, வஞ்சித்துப் பறிக்காதே, உன் தாய் தந்தையை மதித்து நட போன்ற கட்டளைகள் அடங்குகின்றன. இயேசுவின் காலத்து யூத சட்டப்படி விபசார குற்றச்சாட்டிற்கு உள்ளாகின்ற பெண்கள் கல்லால் எறிந்து கொலை செய்யப்பட்டார்கள். இயேசு விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணின் உயிரை காப்பாற்றியதன் மூலம், மனித உயிரின் மாண்பினை நிலைநாட்டி உள்ளார். “உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்.” (யோவான் 08:07) இப்பெண்ணுக்கு மரண

தண்டனை வழங்காமல், பாவம் செய்யாதே எனக் கூறி மனித உயிரைப் பாதுகாத்தார். இயேசு விபசார பெண்ணுக்கு மனமாற வாய்ப்பு அளித்தார். “உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்.” (யோவான் 03:17)

ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். காயினைப் போல் நீங்கள் இராதீர்கள். ஏனெனில் அவர் தீயோனைச் சார்ந்தவர். தனது சகோதரரை கொலை செய்தார். தமது சகோதரர், சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள். எந்தக் கொலையாளிடமும் நிலைவாழ்வு இராது. (1 யோவான் 03:15) எனவே கடவுளின் பிள்ளைகளுக்குரிய அன்பு கட்டளைகளுள் ஒன்றாக கொலை செய்யாதே அமைந்துள்ளது. இக்கட்டளை மனித உயிரின் மாண்பினை எடுத்தியம்பி உள்ளது.

### சமாரியரின் செயற்பாட்டில் உயிரின் மாண்பு

ஒருவர் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகும் பொழுது, கள்வர் கையில் அகப்பட்டார். அவருடைய ஆடைகளை உரிந்து கொண்டு அவரை அடித்துக் குற்றுயிராக விட்டுப்போனார்கள். குரு, லேவியர் அவரைக் கண்டதும் மறுபக்கமாக விலகிச் சென்றார்கள். ஆனால் சமாரியர் பரிவு கொண்டார். தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டு சென்றார். (லூக்கா 10:33) சமாரியருடைய செயற்பாட்டினால் குற்றுயிராக விடப்பட்டவரின் உயிரானது பாதுகாக்கப் பட்டுள்ளது.


### திரு அவையின் படிப்பினைகளில் கொலை செய்யாதே

உயிர்களுக்கு எதிரான கொலை, இன அழிப்பு, கருவழிப்பு, இரக்கக் கொலை, தற்கொலைகள் கடவுளின் மாட்சிமைக்கும் மனித மாண்பிற்கும் முற்றிலும் மாறுபட்டன. (இ.உ.தி.27) நேரடியாக செய்யப்படும் கொலை ஐந்தாம் கட்டளைக்கு எதிரானது. கொலைக்கு உடந்தையாக இருத்தல் கூடாது. (எண் 470) கொலை செய்தல் அல்லது கட்டாயப்படுத்தியோ, வஞ்சகமாகவோ ஓர் மனித ஆளைக் கடத்துதல், காவலில் வைத்தல், உறுப்பை சிதைத்தல், பெரிதும் காயப்படுத்துதல் போன்றவற்றை செய்பவரின் பதவிகள் பறிக்கப்படுதல். (எண் 1397) புனித அகுஸ்தீனார் மனித உயிர்களை கொலை செய்ய வேண்டாம் என அழைப்புவிடுத்துள்ளார். (உயிர்வலி 95) மனித உயிர்களை மதிக்கும் பண்பினை வளர்க்க வேண்டும் என்பது அகுஸ்தீனின் சிந்தனையாக இருந்துள்ளது.

### வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ள மனிதக் கொலைகள்

போருக்குப் பிற்பட்ட காலத்திலிருந்து 2022ம் ஆண்டு வரையில் 544 மனிதக் கொலைகள் வடக்கு மாகாணத்தில் நடைபெற்றுள்ளன. வடக்கு மாகாணத்தினை மையப்படுத்திய ஐந்து மாவட்டங்களுள் அதிகமான மனித கொலைகள் ஒப்பிட்டளவில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளன. மனிதக் கொலைகளினால் காவுகொள்ளப் பட்டுள்ள இரண்டாவது மாவட்டமாக வவுனியா அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**வரைபு - 01**




மூலம்: ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு. (2023). கொழும்பு: பொலிஸ் தலைமையகம். (dir.r.d@police.gov.lk)


**ஆண்டு ரீதியாக மனிதக் கொலைகளால் காவுகொள்ளப்பட்டுள்ள உயிர்கள்**
**அட்டவணை - 01**

| மாவட்டம் | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 32 | 29 | 29 | 23 | 14 | 15 | 13 | 16 | 11 | 13 | 17 | 13 | 13 | 06 | 244 |
| வவுனியா | 36 | 08 | 08 | 10 | 09 | 04 | 06 | 04 | 06 | 03 | 04 | 04 | 06 | 05 | 113 |
| கிளிநொச்சி | - | 10 | 08 | 04 | 13 | 02 | 08 | 04 | 03 | 06 | 08 | 03 | 18 | 05 | 92 |
| முல்லைத்தீவு | - | 02 | 04 | 03 | 05 | 07 | 03 | 02 | 03 | 07 | 02 | 03 | 06 | 08 | 55 |
| மன்னார் | 10 | 04 | 01 | 04 | 03 | 06 | 01 | - | 01 | 02 | 01 | 03 | 02 | 02 | 40 |
| மொத்தம் | 78 | 53 | 50 | 44 | 44 | 34 | 31 | 26 | 24 | 31 | 32 | 26 | 45 | 26 | 544 |

மூலம்: ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு. (2023). கொழும்பு: பொலிஸ் தலைமையகம். (dir.r.d@police.gov.lk)

2009ஆம் ஆண்டு வவுனியாவில் 36 மனித உயிர்கள் கொலை மூலமாக அதிகளவாக காவுகொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தவரையில் 2010, 2011ம் ஆண்டு 58 மனிதக் கொலைகள் மூலமாக உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டத்தினை ஒப்பீட்டளவில் மன்னாரில் குறைந்தளவு மனிதக் கொலைகள் நடைபெற்றுள்ளன.

**ஆண்டு ரீதியாக மனிதக் கொலைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை வரைபு - 02**




மூலம்: ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு. (2023). கொழும்பு: பொலிஸ் தலைமையகம். (dir.r.d@police.gov.lk)

2009ம் ஆண்டு வட மாகாணத்தில் 78 மனித கொலைகள் இடம்பெற்றுள்ளன. 2010ம் ஆண்டு 53 மனிதக் கொலைகளும், 2011ம் ஆண்டு 50 மனிதக் கொலைகளும் நடை பெற்றுள்ளன. 2017ம் ஆண்டு மனித கொலைகளினால் காவுகொள்ளப்படுகின்ற உயிர்களின் எண்ணிக்கையானது குறை வடைந்து 2021ம் ஆண்டு அதிகரித்துச் சென்றுள்ளது. 2021ம் ஆண்டு 45 மனிதக் கொலைகள் மூலமாக உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

### வடக்கு மாகாணத்தில் இடம் பெற்றுள்ள மனிதக் கொலையின் வடிவங்கள்

வடக்கு மாகாணத்தில் மனிதக் கொலை பல வடிவங்களில் நடைபெற்றுள்ளன. மனித உடலை கூரிய ஆயுதத்தால் தாக்குதல், வாள்வெட்டு, கத்தியால் குத்துதல், கண் களை சிதைத்தல், அடித்து துன்புறுத்துதல், துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தல், கழுத்தினை நெரித்துக் கொலை செய்தல், உடல் முழுவதும் மண்ணெண்ணெய் ஊற்றுதல் மற்றும் நச்சுப் பொருட்களை குடிக்கச் செய்தல் போன்ற வடிவங்களில் மனித உயிரைக் காவுகொள்ளச் கொலையை செய்யத் தூண்டுகின்ற தீய மனநிலையானது கொலைவெறி என அழைக்கப்படுகின்றது. ஒருவரது மனித உயிரை காவுகொள்ளச் செய்பவர் “கொலையாளி” என அடையாளப்படுத்தப் படுகின்றார். மனித உயிர் மூச்சின் மாண்பு மற்றும் இறைசாயலை பிறரில் உணராத நிலையினால் மனித கொலைகள் வடக்கு மாகாணத்தில் அதிகமாக இடம் பெற் றுள்ளன. இவ்வாறான பல்வேறு கொலை வடிவங்களை கையாண்டு உயிரை காவு கொள்ளச் செய்துள்ளார்கள்.

### வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ள மனிதக் கொலைக்கான காரணங்கள்

வடக்கு மாகாணத்தில் மனிதக் கொலைகள் இடம்பெற்றமைக்கு பல காரணங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. நிலத்தகராறு, குடும்பப் பிரச்சினை, காதலில் முறிவு, கௌரவப் பிரச்சினை, பிறர் பொருளாதாரத்தில் மேலோங்கியதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை, பிறர் கல்வியில் உயர் இடத்தினைப் பெற்றுக் கொள்ளுதல், வேலை வாய்ப்பில் உயர் வடைந்து செல்லுவதை தடுத்தல், மது போதை, மது அருந்தும் பொழுது ஏற்பட்ட

பிரச்சினை, தவறான உறவிற்கு ஒத்துழைப்பு வழங்காமை, முன்பகை, பழிக்குப் பழி வாங்குகின்ற குரோத சிந்தனை மற்றும் கடனை வட்டிக்கு வாங்கியவர் பணத்தினை மீண்டும் வழங்காத சூழல் போன்ற பல்வேறு காரணங்களால் வடக்கு மாகாணத்தில் மனித உயிர்கள் கொலை என்ற பாதகச் செயலினால் அதிகளவு காவு கொள்ளப்பட்டுள்ளன. மனிதக் கொலை இடம்பெற்றமைக்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. வடக்கு மாகாணத்தில் குடும்பத் தகராறு, காணி பிரச்சினை மற்றும் தனிப்பட்ட கோபங்கள் என்பன மனிதக் கொலைகளுக்கான பிரதான காரணமாக இனங்காணப்பட்டுள்ளது.

**சமகால இலங்கையில் மனிதக் கொலைகள்**

உலகில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 65,000 மனிதபடுகொலைகள் பதிவாகியுள்ளன. நவீன காலத்தில் மனித உயிர்களுக்கான மாண்பும் முக்கியத்துவமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் மானிடர்களுக்கு எதிரான வன்மையான சூழல் நாளுக்கு நாள் அச்சத்தினையே ஏற்படுத்துகிறது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கு அல்ல. இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து சுமார் 14 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் அன்றைய காலத்தினை விட சமகால சூழலில் ஏற்படக்கூடிய இயற்கைக்கு முரணான மனிதப்படுகொலைகள் இலங்கை வாழ் மக்களிடையே பேரச்சத்தினை ஏற்படுத்தியுள்ளன. 2013 - 2015ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற கொலைகளினால் 243 பெண்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் 128 பெண்களின் உயிர்கள் கணவர்களால் காவு கொள்ளப்பட்டுள்ளன. 2022ம் ஆண்டு இலங்கை முழுவதும் 599 மனிதப்படு கொலைகள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. உயிர் வாழ்வதற்கான உரிமை ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமை ஆகும்.

இலங்கையில் 2023ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஆடி மாதம் வரை 358 மனிதப் படுகொலைகள் பதிவாகியுள்ளதாக குற்றப் புலனாய்வு, பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இவற்றில் தனி நபர்களால் 77 கொலைகளும் குழுக்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட 67 கொலைகளும் உள்ளடங்குகின்றன. இவற்றில் 35 கொலைச் சம்பவங்கள் துப்பாக்கிச் சூட்டினால் இடம்பெற்றுள்ளன. எம்பிலிபிட்டி, நுகேகொட, களனி, தங்காலை, பாணந்துரை, கம்பஹா, எல்பிட்டி, கொழும்பு தெற்கு, கொழும்பு மத்தி, கேகாலை, மாத்தறை, நீர்கொழும்பு, கெப்பிட்டிகொல்லாவ, வவுனியா, காலி, பொலனறுவை, முல்லைத்தீவு மற்றும் சீதாவாக்கை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலேயே துப்பாக்கிச் சூடு பதிவாகி உள்ளன.

**பரிந்துரைகள்**

மனித உயிரின் மாண்பு தொடர்பான விழிப்புணர்வானது பாடசாலைப் பாடப் புத்தகங்களில் முதன்மைப்படுத்தப்படுவது அவசியம். மனித உயிர் மூச்சினுடைய மாண்பினை குழந்தைப்பருவத்திலிருந்து பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் உறவினர்களுக்கு எடுத்துரைத்து வழிகாட்டுவது இன்றியமையாதது. இறை சாயலை பிறரில் உணரச் செய்வதன் மூலமாக மனிதக் கொலைகள் இடம்பெறுகின்ற எண்ணிக்கையானது எதிர் காலத்தில் குறைவடையலாம். கொடூர சிந்தனைகளையும் வன்மங்களையும் விடுத்து அன்புடன் வாழ முயற்சித்தால், கொலைக் குற்றங்கள் அற்ற சமுதாயத்தினை கட்டியெழுப்ப முடியும். பாடசாலை கல்வித்திட்டத்தில் ஒழுக்கவியல் கட்டாயப்

பாடமாக அறிமுகப்படுத்தப்படுவதும் நல்லதொரு சமூகமொன்றை உருவாக்க வழிவகுக்கலாம். இத்திட்டமானது ஆரம்ப வகுப்பு முதல் உயர்தரம் வரையிலும் போதனையாகவும் செயல்முறைப்பயிற்சியின் ஊடாகவும் செயன்முறைப்படுத்தும் சூழலில் பரீட்சையில் சித்தி பெறுவதற்காக மாணவர்கள் ஒழுக்கத்தின்பால் தூண்டப் படுவது உறுதி.

## முடிவுரை

மனித மாண்பானது மனித பண்புகளில் மிக முக்கியமான ஒன்றாகும். துப்பாக்கிச் சூடு, வாள்வெட்டு, அடித்துக் கொலை செய்தல் உள்ளிட்ட அனைத்து கொலைக் குற்றங்களின் பின்னணியில் உள்ளத்தில் வெளிப்பட்ட பழிவாங்கும் சிந்தனையும் வன்மமுமே அடையாளப்படுத்தப்பட்டுள் ளன. எதிரியாக நினைப்பவர்களை கொலை செய்து விடுவதால் நிம்மதி கிடைக்கப் போவதில்லை. மாறாக ஒரு உயிரை காவுகொள்ளச் செய்து விட்டோம் என்ற மன அழுத்தமும் அச்சமுமே அதிகரிக்கும். ஆகவே பிரச்சினைக்கான தீர்வு அதனுடன் தொடர்புடையவர்களை கொலை செய்து விடுவதே நல்லது என்ற சிந்தனையிலிருந்து வெளிவருதல் அவசியமானது. எனவே மனித உயிரானது கடவுளுக்குச் சொந்த மானதாகும். கடவுள் கருவறையில் இருந்து மனித உயிரைப் பாதுகாத்து பராமரிக் கின்றார். சமகாலத்தில் மனித உயிர் மேன்மைமிக்கது என்ற விழிப்புணர்வு குறைவடைந்து செல்கின்றது. மனித உயிரானது விலைமதிப்பற்றதாகும் என்ற உணர்வினை இவ் ஆய்வானது ஏற்படுத் துகின்றது. இவ்வுயிரினை புனிதமாக பாதுகாத்தல் ஒவ்வொருவரதும் கடமை. கடவுளது மிகப் பெரிய கொடைகளில் ஒன்றாக மனித உயிர் உள்ளது. இது கடவுள் வழங்கிய அன்புப் பரிசாகும். மனித உயிரை கொலை மூலமாக காவுகொள்ளச் செய்வதற்கான அதிகாரம் மனிதர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே இறைசாயலை பிறரில் உணர்வதன் மூலமாக மனித கொலைகள் வடக்கு மாகாணத்தில் இடம்பெறுவதைக் குறைக்கலாம். இதற்கு கிறிஸ்தவ அமைப்புக்கள் மற்றும் ஏனைய மனித உரிமைகளை மையப்படுத்திய அமைப்புக்களின் புத்தாக்கத்திறன்மிக்க செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது. எனவே உயிர் வாழ்வதற்கான உரிமை ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமையாகும். எந்தவொரு காரணத்தைக் கூறியும் காவுகொள்ளச் செய்வதற்கு இடமளிக்க முடியாது.

## உசாத்துணை நூல்கள்

Innemee, C. 2022. The Value of a Human Life. Netherlands: Sidestone Press.

Hendry, A. 2018. Beyond Wondering about Murder from a Judeo - Christian Perspective. America: Xulon Press.

இளங்கோ, 2005. அறமே வாழ்வாக. சென்னை: இதய வெளியீடு.

கனியன், து. 2006. சமணம். மதுரை: காமராசர் பல்கலைக்கழகம்.

கில்மி, த. 2005. இஸ்லாத்தில் மனித உரிமைகள். சென்னை: இஸ்லாமிய நிறுவனம் வெளியீடு.

கிருஷ்ணன், ந. 2007. பௌத்தத் தத்துவங் களும் தியான முறைகளும். மதுரை: செல்லம் பதிப்பகம்.

கோட்டாறு ஆயர் பேரவை, 2005. திரு அவை சட்டத்தொகுப்பு. திருச்சிராப்பள்ளி: புனித பவுல் இறையியல் கல்லூரி.

சகேஷ், ச. 2014. உயிர் வலி. யாழ்ப்பாணம்: வைகறைப் பதிப்பகம்.

சிகாமணி, ர. 2011. மதங்களும் மனித நேயமும். சென்னை: அபி பதிப்பகம்.

சூசைமாணிக்கம், யே. 2016. திருவிவிலியம், திண்டிவனம்: தமிழ் நாடு ஆயர் மன்றம்.

சோமசுந்தரம், த. 2016. வழி தவறிப் போன ஓர் இளைஞர் தலைமுறை. யாழ்ப்பாணம்: கரிகணன் வெளியீடு.
தமிழக இலத்தீன் ஆயர்பேரவை, 2004. கத்தோலிக்க திரு அவை மறைக்கல்வி ஏடு. திண்டிவனம்: தமிழக முப்பணி களஞ்சியம், நிலையம்.
Paul VI, 1968 Humanae vitae (On Human Life). Borella: Catholic Truth Society.
பவுலார், த. 2013. புதிய தடங்கள். திருச்சிராப் பள்ளி: தேடல் வெளியீடு.
மயூரரூபன், ந. 2012. சமூகப் பிரச்சினைகள். யாழ்ப்பாணம்: எழினி வெளியீடு.
மிக்கேல்ராஜ், சூ. 1971. பத்துக் கட்டளைகள். திருச்சி: வீரமாமுனிவர் கழகம்.